

இராணிப்பேட்டை மாவட்டம் காவேரிப்பாக்கம் தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட, ஆலப்பாக்கம் கிராமம், வாக்குச்சாவடி எண் : 205 மற்றும் 206 ல் நடைபெற்று வரும்எஸ்.ஐ.ஆர். வாக்காளர் சிறப்பு தீவிரதிருத்த முகாமை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் மாவட்ட செயலாளர் ஆர்.காந்தி பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் ஒன்றிய கழக செயலாளர் ஓச்சேரி எம்.பாலாஜி, மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



வேலூர் வடக்கு மாவட்டம் கே.வி.குப்பம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, கே.வி.குப்பம் மத்திய ஒன்றியம் ஆலங்கனேரி அரசு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு முகாமில் எஸ்ஐஆர்குறித்த சிறப்பு தீவிர வாக்காளர்கள் திருத்தல் நடைபெற்று வருவதை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார் . இதில் ஒன்றிய கழக செயலாளர்கள் லோ.ரவிசந்திரன், கே.சீதாராமன், ஆர்.முருகேசன், பாக முகவர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்!

# 5 ஆயிரம் பேருக்கு அசைவ உணவுத் திருவிழா!

## சிவகங்கை மாவட்ட சுற்றுச் சூழல் அணி சார்பில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்கினார்!

சிவகங்கை, நவ 26 - சிவகங்கை மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் மு. குமணன் ஏற்பாட்டில் சிவகங்கையில் துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு அசைவ உணவு திருவிழா நடைபெற்றது.

மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவு துறை அமைச்சர் கே ஆர். பெரியகருப்பன் தலைமை ஏற்று 5000 பேருக்கு அசைவ உணவினை வழங்கிசிறப்புரைஆற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன்,மாவட்ட கழக துணை செயலாளர்த.சேங்கைமாறன்மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எஸ்.எஸ்.ஏ.வல்லபாய் ஆகியோர் பேசினார்.

முன்னதாக சிவகங்கை வடக்கு ஒன்றிய செயலாளர் திருமலை முத்து ராமலிங்கம் வரவேற்றுப் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் முன்னாள் எம்.எல்.ஏ. எஸ். மாரியப்பன் கென்னடி, மாநில கொள்கை பரப்பு இணைச் செயலாளர் தமிழ் பிரியா பிரபாகரன் , மாவட்ட இளைஞரணி அணிப்பாளர் நாகனி செந்தில்குமார், மாவட்ட மகளீரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன் , மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி .ராஜ்குமார், மாவட்ட ஆதிராவிடநலக்குழு அமைப்பாளர் சிங்கமுத்து, அயலக அணி சன் சீமான் சுப்பையா பொதுக் குழு உறுப்பினர்கள் திருமதி ஆதி.கண்ணாத்தாள், ஏஆர்ஜெயமூர்த்தி,, மகளிரணி மார்கரெட்கமலா, திலகவதி கண்ணன்,ராஜேஸ் வரி,

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கள் கார்த்தி,எஸ்.எம். மதிவாணன், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் ஏ.டி. என்.ரவி,தொ.மு.ச.முருகேசன், ஒன்றிய செயலாளர்கள் எம். .ஜெயராமன், யோக. கிருஷ்ணகுமார், அ .முத்துச்சாமி துரை.,ராஜாமணி , ஆர் .எம் .கென்னடி ,ஒன்றிய துணைச் செயலாளர் எஸ் முத்துக்குமார், பிள்ளையார்பட்டி சதீஸ், மற்றும் சுற்றுச்சூழல்அணி நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

### துரைச்சாமிபுரத்தில் சாலை விபத்தில் 7 பேர் பலி!

# காயமடைந்தோர் மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்றனர்!

## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் நேரில் ஆறுதல்!

தென்காசி, நவ. 26 - தென்காசி மாவட்டம் துரைச்சாமிபுரத்தில் இரண்டு தனியார் பேருந்துகள் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் ஏற்பட்ட சாலை விபத்தில் வனராஜ் (67) சண்முகத்தாய் (60) தேன்மொழி (55) கற்பகவல்லி (32) மல்லிகா (55) முத்துலட்சுமி ( 35 )சுப்புலட்சுமி (52) ஆகிய 7 பேர்கள் உயிரிழந்தனர். இதில் காயமடைந்து தென்காசி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொண்டு வருபவர்களை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர். இராமச்சந்திரன் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.

பின்னர் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.இராமச்சந்திரன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது

தென்காசி மாவட்டம் துரைச்சாமிபுரத்தில் 24ம்தேதி அன்று காலை இரண்டு தனியார் பேருந்துகள் நேருக்கு நேர் மோதிக்கொண்டதால் ஏற்பட்ட சாலை விபத்தில் 73 நபர்கள் மீட்கப்பட்டதில் 7 நபர்கள் இறந்துள்ளார்கள். 60 நபர்கள் சிகிச்கைக்காக தென்காசி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை யிலும்,6 நபர்கள் திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து, மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் விபத்துக்குள்ளான தனியார் பேருந்து (KAYESR ) உரிமத்தினை ரத்து செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் என்னிடமும்,மாவட்ட ஆட்சியர் அவர்களிடமும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு விபத்தின் விவரங்கள் குறித்து கேட்டறிந்து, காயமடைந்த அனைவருக்கும் உயரிய மருத்துவ சிகிச்சை வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என உத்தரவிட்டார்கள். மேலும், உடனடியாக என்னை சம்பவ இடத்திற்கு சென்று காயமடைந்த வர்களுக்கான சிகிச்சை வழங்குவது குறித்து ஆலோசனை வழங்க வேண்டும் என உத்தரவிட்ட தற்கிணங்க காயமடைந்தவர்களை சந்தித்து அவர்களுக்கு தேவைப் படுகின்ற அனைத்து சிகிச்சை வசதிகளையும் மாவட்ட நிர்வாகம் மற்றும் மருத்துவமனை நிர்வாகத்தின் மூலம் செய்து கொடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் இன்று ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு தலா ரூ.3 இலட்சமும்,பெருங்காயம் அடைந்தவர்களுக்கு தலா ரூ.1 இலட்சமும்,சிறு காயம் அடைந்தவர்களுக்கு தலா ரூ.50,000 மும் வழங்கப்படும்.என தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இவ்வாறு அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.இராமச்சந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது,மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணிஸ்ரீகுமார்,தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன்,தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அரவிந்த் மருத்துவர்கள் மற்றும் மருத்துவமனை செவிலியர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் இருந்தனர்.

### கடலூர் கிழக்கு மாவட்டம் முழுவதும்

# இளைஞர் எழுச்சி நாள் விழா - நல உதவிகள் வழங்கி கொண்டாடுவோம்!

## மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

கடலூர், நவ. 26 - கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம், 25.11.2025, செவ்வாய் கிழமை, காலை 10 மணியளவில், காணொலி காட்சி மூலமாக நடைபெற்றது.

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார்.

கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி, கோ.ஐயப்பன் எம்.எல்ஏ., முன்னாள் எம்.எல்.ஏ., துரை.கி.சரவணன், மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன், தொகுதி பார்வையாளர்கள் அங்கயற்கண்ணி, சுவை.சுரேஷ், விஜயன்



ராமகிருஷ்ணன், எம்.எம். சிவா,அ.பாரிபாலன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் கீழ்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நவம்பர் 27ல் பிறந்த நாள் காணும் தமிழ்நாடு துணை முதலமைச்சரும், கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கடலூர் கிழக்கு மாவட்ட கழகம் சார்பில், மாநகரம், ஒன்றியம், நகரம்,பேரூர் மற்றும் கிளை கழங்கள்தோறும் கழக கொடியேற்றியும், இனிப்புகள் வழங்கியும், நலத்திட்ட உதவிகள் வழங்கியும், பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கியும், விளையாட்டு போட்டிகள் நடத்தியும் சிறப்பாக கொண்டாட வேண்டும்.

கடலூர் கிழக்கு மாவட்ட கழகத்தில் நடைபெற்று வரும் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை அனைத்து கழக நிர்வாகிகளும் தீவிர களப்பணியாற்றி சிறப்பாக செய்திட வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாவட்ட கழக துணை செயலாளர்கள்: அ.ஞானமுத்து, ஆர்.சக்திவேல், சுதா சம்பத்,

ஒன்றிய கழக செயலாளர்கள்:

காட்டுமன்னார்கோவில் மேற்கு அ.முத்துசாமி, காட்டுமன்னார்கோவில் த.ஜெயபாண்டியன்,

குறிஞ்சிப்பாடி தெற்கு வி. சிவக்குமார், குறிஞ்சிப்பாடி வடக்கு ஆர்.நாராயணசாமி,

திருமுட்டம் கிழக்கு தங்க. ஆனந்தன், திருமுட்டம் மேற்கு கே.ஆர். கோவிந்தராஜ், திரு முட்டம் வடக்கு எஸ்.செந்தில் குமார், கடலூர் கிழக்கு தெ.காசிராஜன், கடலூர் மேற்கு பி.சுப்பிரமணியன், கடலூர் வடக்கு கே.ஆர். தனஞ்செயன்,

கடலூர் தெற்கு ஆர். விஜயசுந்தரம், கடலூர் மத்திய கே.மகேஷ் , புவனகிரி கிழக்கு ஏ.எஸ்.மதியழகன், புவனகிரி மேற்கு ஏ.எம். மதியழகன், புவனகிரி மத்திய மு.வெற்றிவேல், கீரப்பாளையம் கிழக்கு வி.ஜி. பி.சபாநாயகம், கீரப்பாளையம் மேற்கு டி.திருமூர்த்தி,கீரப்பாளையம் மத்திய வி.பி.பாலு, கம்மாபுரம் வடக்கு பா. திருமாவளவன்,

கம்மாபுரம் தெற்கு கே. ஆர்.ராயர், கம்மாபுரம் மத்திய பி.சுந்தரபாண்டியன், பரங்கிப்பேட்டை வடக்கு முத்துபெருமாள், பரங்கிப்பேட்டை தெற்கு ஆர்.கலையரசன், பரங்கிப்பேட்டை மத்திய எம். மனோகரன்,

குமராட்சி கிழக்கு த.சங்கர்,குமராட்சி மத்திய ஆர். ராஜேந்திரன், குமராட்சி மேற்கு கே.நடராஜன்,

குமராட்சி தெற்கு ம. சோழன், குமராட்சி வடக்கு வி.கோவிந்தசாமி,

கடலூர் மாநகர செயலாளர்: கே.எஸ்.ராஜா, கடலூர் பகுதி செயலாளர்கள்: ப.நடராஜன், பா. வெங்கடேஷ், எஸ்.சலீம், மு.இளையராஜா, வடலூர் நகர கழக செயலாளர்கள் கே.ஆர்.செந்தில்குமர், த. தமிழ்ச்செல்வன், வடலூர் நகரமன்றத் தலைவர் எஸ். சிவக்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: வ.ஞானசேகரன், வே.விக்கிரமன், பொதுக்குழு உறுப்பினர்கள்: கே.பி.ஆர். பாலமுருகன், த.ஜேம்ஸ். விஜயராகவன், இரா.தமிழரசன், ச.கல்யாணசுந்தரம், என்.டி.கணேசன், மஞ்சு, பா.கோதண்டபாணி,

மாவட்ட தொகுதி பார்வையாளர்கள் ஆசிரியர் பி.வெங்கடாஜலபதி,ஆசிரியர் சின்னமணி,தருமர் பழனிசாமி,

பேரூர் செயலாளர்கள்: காட்டுமன்னார்கோவில் எஸ்.கணேசமூர்த்தி, குறிஞ்சிப்பாடி கு.வே.ப. ஜெய்சங்கர், சேத்தியாதோப்பு ப.மனோகரன், திரு முட்டம் பூ.செல்வகுமார், புவனகிரி த.கந்தன், அண்ணாமலை நகர் க.பழனி, லால்பேட்டை எம்.அன்வர்சதாத், கெங்கைகொண்டான் பக்தவச்சலம், பரங்கிப்பேட்டை பேரூராட்சி தேன்மொழி சங்கர்,

மாவட்ட கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள்:

இளைஞரணி அமைப்பாளர் ஜி.கார்த்திகேயன்,

மாணவரணி அமைப்பாளர் அப்பு ஆர்.சந்தியநாராயணன், பொறியாளர் அணி அப்புசந்திரசேகரன், தொண்டரணி ஆராமுது, விவசாய அணி பொன். பன்னீர்செல்வம், விவசாய தொழிலாளர் அணி ம.இராமசாமி, மகளிர் அணி த.அமுதராணி, மகளிர் தொண்டரணி, ப.மனோரஞ்சிதம், வழக்கறிஞர் அணி பி.அருள் ஜோதி, ஆதிதிராவிடர் நல்லக்குழு ஆர்.பரந்தாமன், சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு எம்.எஸ்.முகமது யூனூஸ், வர்த்தகர் அணி ஆர்.ரெங்கநாதன், தொமுச பி.பழனிவேல், தகவல் தொழில்நுட்ப அணி ஏ.ஜாபர் அலி, விளையாட்டு மேம்பாட்டு அணி பூ.சதீஷ்குமார், மீனவர் அணி வீ.செல்வபாரதி, அயலக அணி வாசு, தொழிலாளர் அணி கி.தண்டபாணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி தாணூர் சிவக்கொழுந்து, நெசவாளர் அணி நல்லதம்பி, இலக்கிய அணி பழனிசாமி, டி. வெங்கடாஜலபதி, கலை இலக்கிய பிரிவு, ஜி.சின்னமணி, தகவல் தொழில்நுட்ப அணி அ. முத்தமிழ்செல்வன், வி.எம். வெற்றிசெல்வன், ப.பிரவின்குமார் உள்ளிட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.



சேலம் மாவட்டம் ஆத்தூரில் தீவிர வாக்காளர் சரிபார்ப்பு பணியினை(SIR) ஆத்தூர் தொகுதி பொறுப்பாளர் கடலூர் மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ்.கணேஷ்குமார் வீடு வீடாக சென்று ஆய்வு செய்தார். உடன் ஆத்தூர் தெற்கு நகர கழக செயலாளர் ஏ.ஜி. இராமச்சந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



கள்ளக்குறிச்சி சட்டமன்ற தொகுதி, தியாகதுருகம் பேரூராட்சிக்கு உட்பட்ட பாகம் எண் (111) (110) (113) (119) ஆகிய பகுதிகளில் பூத் லெவல் ஆபீஸர், பூத் லெவல் ஏஜெண்ட், பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் ஆகியோரை கள்ளக்குறிச்சி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் நேரில் சந்தித்து, எஸ்.ஐ.ஆர். – (சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு) பணிகள் குறித்த ஆலோசனைகளை வழங்கி, மிக குறைந்த நாட்கள் மட்டுமே உள்ள நிலையில், எஸ்ஐஆர் பணிகளை முழுமையாகவும், தீவிரமாகவும் மேற்கொள்ளவேண்டும் என அறிவுறுத்தினார்.



நாகர்கோவில் மாநகராட்சி, மாமன்ற உறுப்பினர்கள் கூட்டமானது மாமன்ற கூட்ட அரங்கில் மாவட்டச் செயலாளர் – மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது. ஆணையாளர் நிஷாந்த் கிருஷ்ணா, துணை மேயர் ம.மேரி பிரின்ஸி லதா ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் சரவணன், கெபின் ஜாய், அரவிந்த் ஜோதி, ரகுராமன், இ.ஜவகர், கு.அகஸ்டினா கோகிலவாணி, பா.செல்வகுமார், பா.முத்துராமன், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி, விக்கிரவாண்டி பேரூராட்சியில் உள்ள (227, 228, 229, 230, 231, 232, 233, 234, 235, 236) வாக்குச்சாவடிகளில் S.I.R ( சிறப்பு வாக்காளர் திருத்த பணிகள்) 23.11.2025 நடைபெற்று வரும் சிறப்பு முகாமை விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன். கௌதமசிகாமணி நேரில் சென்று பார்வையிட்டார். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



விழுப்புரம் மத்திய மாவட்டக் கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா. இலட்சுமணன் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கான கணக்கீட்டு படிவம் வழங்கும் பணியை விழுப்புரம் சட்டமன்ற தொகுதி, விழுப்புரம் நகரம், 11, 25 வது வார்டில் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட பொறுப்புக் குழு உறுப்பினர் வழக்கறிஞர் இரா.கண்ணப்பன், நகர கழக பொறுப்பாளர் இரா.சக்கரை, நகர பொறுப்புக்குழு உறுப்பினர்கள், வார்டு செயலாளர்கள், மாவட்ட, நகர கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், BLA2, BDA, BLC, வார்டு கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.